வதோடு கூட இங்கும் கன்னியாகுமரியில் ரப்பர் தோட்டங்கள் வைக்க சில நிலப்பரப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கூனூரிலும் தோட்டப் பயிர் வைக்க அவர்களுக்கு உதவப்படுகிறது. அந்தமானில் குடியமர்த்த மத்திய அரசே திட்டமிட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: இப்போது அந்தமான் தீவில் தமிழர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் லோக் சபாவுக்கு ஒரு தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவரும் மந்திரியாக அங்கே இருக்கிறார். ஆகவே அந்தமானுக்கு சீஃப் கமிஷனராகவும் ஒரு தமிழரையே நியமனம் செய்ய வேண்டும் என்பதை நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்துமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அந்தமானில் தமிழர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள அதிகாரிகளும் தமிழர்களாக இருத்தல் வேண்டும் என்று அங்குள்ளவர்கள் விரும்புகிறார்கள் என்கிற கருத்தில் தான் அங்குள்ள சீஃப் அட்மினிஸ்ட்ரேடர் தமிழ் அதிகாரிகளை அனுப்பி வைக்குமாறு எங்களுக்கு எழுதுகிறார்கள். நாங்கள் அனுப்பி வைக்கிறோம். சீஃப் அட்மினிஸ்ரேட்டரை நியமிக்கிற பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் நேரிடை அதிகாரத்தில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: அண்மையில் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்தமானுக்குச் சென்று வந்தார்களே, அங்கே அகதிகள் குடியமர்த்துவது பற்றி சீஃப் அட்மினிஸ்ரேட்டரிடம் கலந்து பேசி வந்தார்களா? விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதுபற்றியும் ஆராயப்பட்டது. இன்றைய தினம் ஆறாயிரம் ஏக்கரா நிலத்தில் ஆயிரத்து அறு நூறு சிலோன் அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை அளிக்க ரப்பர் தோட்டப் பயிர் செய்ய வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கு பத்தாயிரம் ஏக்கரா நெல் சாகுபடி செய்வதற்கு லாயக்கான நிலம் இருக்கிறது. பர்மாவில் இருந்து வரும் அகதிகள் சிறு வியாபாரம் செய்யவும், விவசாயம் செய்யவும் தான் பழக்கமுள்ளவர்கள். ஆகவே பர்மா அகதிகளை அங்கே குடியேற்றி நெல் சாகுபடிக்கு வேண்டிய வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரலாம் என்பதும் அவர்களோடு சேர்ந்து யோசிக்கப்பட்டது.

***782 *Q.*—Thiru N. DENNIS**: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the progress made in establishing rubber plantations for the Burma repatriates in this State ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இம்மாநிலத்தில் பர்மா அகதிகளுக்காக ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுமில்லை. ஆனால், இலங்கை அகதிகளுக்கு புதுவாழ்வு அளிப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் வளர்க்கும் திட்டம் ஒன்றை நாம் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டத் திற்காகும் மொத்தச் செலவு ரூ. 124.63 லட்சம், 2,000 ஏக்கர் பரப்பளவில் ரப்பர் தோட்டம் வளர்க்கப்படும்.